**நிறுவனத்தின் பெயர்** - கம்பளை நகர பை

**எமது நோக்கு** - கங்கசிரி புர வாழ் பெது மக்களுக்கான அதியுயர் சேவை ஒன்றை வழங்குதல்

**எமது அரும்பணி** - "  குடிமக்களின் மனதுக்கு இதமாக, ஆரோக்கியத்தை பராமரிக்கும் சுகாதார சேவைகள்,
பச்சை நிற,  பசுமையான மரம் செடி கொடிகள்  நிறைந்த, கண் குளிர்ச்சியான தரிசனம்,
விரிவடைந்த சாலைகள், இருளை அகற்றுவதற்கு தேவையான வீதி விளக்குகள், தாகம் தீர்ப்பதற்காக குடிநீர்,
நகரின் அழகை மேம்படுத்துவதற்கான முறையான கட்டிட திட்டங்கள்,
அறிவை ஊட்டுவதற்கான பொது நூலகங்கள் என்பவற்றை உங்கள் ஆதரவுடன், நிரந்தரமாக வழங்குவதே எமது குறிக்கோள்

# கம்பளை நகர சபையின் குடிமக்கள் சேவை பெறுநர் சாசனம்

| **தொடர் இல.** | **வழங்கப்படும் சேவைகள** | **தேவைப்படும் ஆவணங்கள்** | **சேவையை வழங்குவதற்கு எடுக்கும் காலம்** | **நேரடி தொடர்பு அதிகாரி மற்றும் தொலை பேசி எண்** | **சந்திக்கவேண்டிய அலுவலர்** | **செலுத்தும் கட்டணம்** |
|---|---|---|---|---|---|---|
| 01 | வியாபார அனுமதிப்பத்திரம் பெறுதல் | ➢ அமைவிடத்தின் சொத்து உரிமை அல்லது வாடகை உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணம்<br>➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்<br>➢ சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திமொன்று பெறவேண்டிய தொழில் அல்லது வியாபாரம் ஒன்றாக இருந்தால் செல்லுபடியாகும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தின் உறுதிப்படுத்திய  பிரதியொன்று | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ வருமானப் பிரிவின் பொறுப்பாளர்<br>➢ பொது சுகாதாரப் பரிசோதகர்<br>➢ விடய அலுவலர் | நகர சபையினால் வழங்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 02 | மதிப்பீட்டு வரிப் பதிவேட்டில் ஆதன உரித்தாளரது பெயரில் மாற்றம் செய்தல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தை ரூ. 200.00 செலுத்திக் காசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ காணி உறுதியின் பிரதி<br>➢ வரை திட்டத்தின் பிரதி<br>➢ வழிமுறைக் குறிப்பு (வழிமுறைக் குறிப்பு சரியானதென நொத்தாரிசு ஒருவரால் விண்ணப்பப் படிவத்தில் அதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்) | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ தலைமை வருமானப் பரிசோதகர்<br>➢ விடய அலுவலர் | நகர சபையினால் வழங்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் |
| 03 | மதிப்பீட்டு வரி இலக்கத்தைப் பெற்றுக்கொள் ளல் | ➢ மதிப்பீட்டு வரி இலக்கம் பெறப்படவேண்டிய காணித்துண்டு பற்றிய விண்ணப்பப் படிவம்<br>➢ காணி உறுதியின் பிரதி<br>➢ வரை திட்டத்தின் பிரதி<br>➢ கட்டிடமொன்று முன்வைக்கப்பட்டுள்ளதெனின் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைவு<br>➢ முதல் காணி உறுதி பிரிக்கப்பட்டு உள்ளதெனின் குறித்த காணியை இணை பிரிப்பு செய்வதற்கென நகரசபையிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வமான சான்றுகளை முன்வைக்கவும். | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ வருமானப் பிரிவின் பொறுப்பாளர்<br>➢ தலைமை வருமானப் பரிசோதகர்<br>➢ மதிப்பீட்டுவரி வட்டாரப் பொறுப்பு அலுவலர்<br>➢ விடய அலுவலர் | நகர சபையினால் வழங்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | வணிக வரி அறவிடுதல் | நகர சபை உங்களுக்கு அனுப்பிய வணிகவரி அறிவித்தல் | 01 நாள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | வருமானப் பரிசோதகர் | வரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை |
| 05 | தொழில் வரி அறவிடுதல் | நகர சபை உங்களுக்கு அனுப்பிய வணிகவரி அறிவித்தல் | 01 நாள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | வருமானப் பரிசோதகர் | வரி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை |
| 06 | சொத்து உரிமையை பதிவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் | • சரியாகப் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம் (02 பிரதிகளுடன்)<br>• நொத்தாரிசு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட பத்திரத்தின்(Deed) 02 பிரதிகள் | 05 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | வருமானப் பரிசோதகர் | விண்ணப்ப படிவங்கள் கட்டணம் ரூ. 250.00 |
| 07 | ஏனைய நிலங்கள் விற்பனை மீதான வரி | நகர சபை உங்களுக்கு அனுப்பிய ஏனைய நிலங்கள் விற்பனை மீதான வரி அறிவித்தல் | 15 நிமிடங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | விடய அலுவலர் | நிலம் விற்கப்பட்ட பண மதிப்பில் ஒரு சதவீதம் (1%). |
| 08 | விளம்பரப்பதாதை, கட்அவுட், நிரந்தர விளம்பரப் பலகை என்பவற்றை காட்சிப்படுத்துவதற்கு அனுமதி பெறுதல் | ➢ தமது தேவையைக் குறிப்பிட்டு அதன் விளம்பர ஊடக அளவு, விளம்பரம் செய்யப்படவுள்ள இடம் என்பவை உள்ளடங்கிய எழுத்துமூல கோரிக்கை.<br>➢ வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான இடமெனின் குறித்த அதிகார சபையின் அனுமதி பெறப்பட்ட ஆவணங்கள் | 03 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | வருமானப் பரிசோதகர் விடய அலுவலர் | ➢ துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரத்தின் பரப்பளவு அடிப்படையில் அனுமதிப்பத்திரக் கட்டணம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ➢ ஏதேனும் ஒரு சாலையில், பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் விளம்பரப் பலகை நிறுவப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டால், குறித்த விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இடம் சொந்தமான காவல் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவின்பொறுப்பு அதிகாரியினால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி.<br>➢ விண்ணப்பதாரர் நிலத்தின் உரிமையாளராக இல்லாத பட்சத்தில், அந்த விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நிலம் அல்லது கட்டிடத்தின் உரிமையாளர் அதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகக் குறிப்பிடப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி<br>➢ நகர்ப்புற மேம்பாட்டு பகுதிக்குள் விளம்பரப் பலகை காட்சிப்படுத்தப்பட்டால், 2021 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு ஆணைகளின் ஆணை 104 இன் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் அல்லது நகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் உருதிப்படுத்திய பிரதி | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 09 | கேளிக்கை வரி அறவிடுதல் மற்றும் கேளிக்கை வரியில் இருந்து விடுதலை செய்தல் | 1. கேளிக்கை வரி அறவிடுவதற்காக<br><br>I. விற்பனைக்காக தயார் செய்யப்பட்டுள்ள அச்சிடப்பட்ட அனுமதிச் சீட்டுகள்<br>II. இணைய தளம் ஊடாக விற்பனைக்காக உத்தேசித்திருக்கும் அனுமதி சீட்டுக்களில் மின்னணு முத்திரை வைப்பதற்காக கணினி கடவுச்சொல்<br><br>2. கேளிக்கை வரியிலிருந்து விடுதலை பெறுவதற்கு, மேலே உள்ள 1ல் உள்ளபடி செயல்படும்<br><br>I. விற்னைக்காக உத்தேசித்திருக்கும் அனுமதி சீட்டுக்களின் மதிப்பைப் பொறுத்து, கேளிக்கை வரிக்குச் சமமான தொகையை முதலில் நகர சபையில் வைப்பு செய்ய வேண்டும்.<br>II. கேளிக்கை வரியை வைப்பு செய்யும் சந்தர்ப்பத்திலேயே, பொழுதுபோக்குப் பணியின் வரவு மற்றும் செலவுகளின் மதிப்பீடு<br>III. பொழுதுபோக்குப் பணி முடிவடைந்து 30 நாட்களுக்கு முன், பொழுதுபோக்குப் பணியின் உண்மையான வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய விவரங்கள் | 1. 02 நாட்கள்<br><br>2. இணைப்பு 02 சமர்ப்பிக்கப் பட்ட நாளிலிருந்து 7 நாட்கள் | முன் பணிமனை அலுவலர்<br>081-2352275 | ➢ வருமானப் பரிசோதகர்<br>➢ விடய அலுவலர் | (அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட சபை விதிமுறைகளின்படி இந்த சதவீதம் நிர்ணயிக்கப்படும்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 10 | இறுதிச் சடங்கு மண்டபம் வாடகைகள் | ➢ சரியாகப் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம்<br>➢ இறந்தவரின் இறப்பு சான்றிதழ்<br>➢ இறந்தவரின் தேசிய அடையாள அட்டை<br>➢ தகன சாலை முன்பதிவு செய்ய வரும் நபரின் தேசிய அடையாள அட்டை | மண்டபம் பதிவு 15 நிமிடங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ பொது சுகாரதாரப்பரி சோதகர்<br>➢ விடய அலுவலர் | 01. மண்டப கட்டணம் ரூ.15000.00<br>02. பாதுகாப்பு வைப்பு ரூ.5000.00 |
| 11 | நகர மண்டபம் வாடகைகள் | ➢ சரியாகப் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் | மண்டபம் பதிவு 15 நிமிடங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | 01. மண்டப கட்டணம் ரூ.7500.00<br>02. பாதுகாப்பு வைப்பு ரூ.5000.00 |
| 12 | விளையாட்டு மைதான வாடகை | ➢ சரியாகப் பூர்த்திசெய்த விண்ணப்பப்படிவம் | மண்டபம் பதிவு 15 நிமிடங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | 01. மண்டப கட்டணம் ரூ12000.00<br>02. பாதுகாப்பு வைப்பு ரூ.5000.00 |
| 13 | தகன சாலை முன்பதிவு | ➢ சரியாகப் பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம்<br>➢ விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி (சரிபார்ப்பதற்கு மூலப்பிரதி தேவை)<br>➢ இறந்தவரின் இறப்புச் சான்றிதழின் பிரதி (சரிபார்ப்பதற்கு மூலப்பிரதி தேவை) வெளிநாட்டில் மரணம் ஏற்பட்டிருந்தால், அந்த நாட்டில் வினியோகிக்கப்பட்ட இறப்புச் சான்றிதழ் - ஆங்கில மொழியில் இல்லை என்றால் ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | 15 நிமிடங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ கடமை நேரம் முடிவடைந்திருப்பின், நியமிக்கப்பட்ட அதிகாரி | ➢ அதிகார பிரதேசத்திற்கு உள்ளே ரூ. 10000.00<br>➢ வெளியே ரூ. 12000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | கட்டிட வரைதிட்ட மொன்றை அங்கீகரித் துக் கொள்ளல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தைக் குறித்த கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ தகைமை பெற்றுள்ள ஒருவரது பரிந்துரையுடன் கட்டிடத் திட்ட வரைவின் 3 பிரதிகள்<br>➢ இணை பிரிப்பு செய்யப்பட்ட காணியெனின், அங்கீகரிக்கப்பட்ட இணை பிரிப்பின் ஒரு போட்டோ பிரதி<br>➢ சிக்கலற்ற காணி உறுதியின் ஒரு போட்டோ பிரதி<br>➢ காணி இணை பிரிப்பின் நிபந்தனைகளுக்கமைவான பரிந்துரைக் கடிதங்களது போட்டோ பிரதிகள்<br>➢ மண்சரிவு அபாயப் பிரதேசமெனின் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தின் தகைமைச் சான்றிதழும் அதன் போட்டோ பிரதியும்<br>➢ வயற்காணி எனின், அதனை நிரப்புவதற்கான கமநல சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை<br>➢ விண்ணப்பதாரியினதும் காணி உரிமையாளரதும் தேசிய அடையாள அட்டைகளின் போட்டோ பிரதிகள் | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ செயலாளர்<br>➢ சிரேஷ்ட பணி அதிகாரி (S.W);<br>➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ. 850.00. . .<br>➢ முன்கூட்டிய கட்டணம் (திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு ஆணைகளின் அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தியின் தன்மைக்கேற்ப கட்டணம்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ➢ காணிக்குரிய நுழைவாயில் வழித்தடம் காட்டும் வரைபடம்<br>➢ பரப்பளவுக்கமைய குறித்த முன்கூட்டிய கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு (முன்கூட்டிய கட்டண விபரம் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. | | | | |
| 15 | காணி இணை பிரிப்புக்கான அனுமதி பெறுதல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தைக் குறித்த கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ வரைதிட்டத்தின் மூலப்பிரதியுடன் அதன் போட்டோ பிரதியும்<br>➢ 1:1000 அளவீட்டில் வரையப்பட்ட இணை பிரிப்புக்கான நிலஅளவையாளர் திட்டமும் அதன் 02 போட்டோ பிரதிகளும்<br>➢ சிக்கலற்ற காணி உறுதியும் அதன் போட்டோ பிரதியும்<br>➢ மண்சரிவு அபாயப் பிரதேசமெனின் தேசிய கட்டிட ஆய்வு நிறுவனத்தின் தகைமைச் சான்றிதழும் அதன் போட்டோ பிரதியும்<br>➢ வயற்காணி எனின், அதனை நிரப்புவதற்கென கமநல | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ கௌரவ தலைவர்<br>➢ செயலாளர்<br>➢ சிரேஷ்ட பணி அதிகாரி (S.W)<br>➢ (திட்டமிடற் பிரிவு)<br>➢ தொழில்நுட்ப அலுவலர்<br>➢ விடய அலுவலர் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ. 150.00<br>➢ முன்கூட்டிய கட்டணம் (திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு ஆணைகளின் அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தியின் தன்மைக்கேற்ப கட்டணம்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சேவைகள் திணைக்களத்தின் பரிந்துரை<br>➢ விண்ணப்பதாரியினதும் காணி உரிமையாளரதும் தேசிய அடையாள அட்டைகளின் போட்டோ பிரதிகள்<br>➢ காணிக்குரிய வழித்தட வரைபடம்<br>➢ பரப்பளவுக்கமைய குறித்த முன்கூட்டிய கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டு (முன்கூட்டிய கட்டணம் தொடர்பான விபரங்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. | | | | |
| 16 | தகவுச் சான்றிதழ் பெற்றுக்கொள் ளல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தைக் குறித்த கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ அபிவிருத்திச் சான்றிதழின் மூலப் பிரதி (அபிவிருத்திச் சான்றிதழின் செல்லுபடிக் காலம் ஒரு வருடமாகும். அது முடிவடைந்திருப்பின் காலத்தை நீடிப்பு செய்ய ஏற்பாடு செய்தல் வேண்டும்)<br>➢ தகவுச் சான்றிதழைப் பெறவேண்டுமெனின் குறித்த காணியின் பரப்பளவுக்கமைய கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு | அங்கீகரிக்கப் பட்ட வரைதிட்டத் துக்கு அமைய நிர்மாணிக்கப் பட்டிருப்பின் 02 வாரங்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ கௌரவ தலைவர்<br>➢ செயலாளர்<br>➢ பணி அதிகாரி (S.W) (திட்டமிடற் பிரிவு)<br>➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ. 150.00<br>➢ முன்கூட்டிய கட்டணம் (திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு ஆணைகளின் அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தியின் தன்மைக்கேற்ப கட்டணம்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 17 | அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களுக்கான பதில் அனுமதி வழங்குதல் | ➢ நகர்ப்புற மேம்பாட்டு பகுதியாக இருப்பின், 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு உத்தரவுகளின் துணை ஆவணம் 1 இன் விண்ணப்ப படிவம் அல்லது வேறு பிரதேசமாக இருப்பின், முன் பணிமனை அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்ப படிவம்<br>➢ விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி<br>➢ ஒரு தகுதிவாய்ந்த நபரால் உறுதிப்படுத்தப்பட்ட கட்டிடத் திட்டத்தின் ஐந்து பிரதிகள் கோரிக்கையின் தன்மையைப் பொறுத்து குறித்த தகுதியான நபர் யார் என்பதை நகர சபை வலைத்தளம் அல்லது முன் பணிமனை அலுவலகத்திலிருந்து தெரிந்து கொள்ள முடியும்<br>➢ கட்டிடம் அமைக்கும் நிலத்தின் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர் திட்டத்தின் பிரதியொன்று (நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நகர்ப்புற மேம்பாட்டு பகுதிகளுக்கு மட்டுமே பொருந்தும்)<br>➢ கட்டிடம் அமையும் தன்மையின் அடிப்படையில் விண்ணப்பத்தில் | 28 நாட்கள் | முன் பணிமனை அலுவலர்<br>081-2352275 | ➢ கௌரவ தலைவர்<br>➢ செயலாளர்<br>➢ பணி அதிகாரி (S.W) (திட்டமிடற் பிரிவு)<br>➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ. 850.00<br>➢ முன்கூட்டிய கட்டணம் (திட்டமிடல் மற்றும் மேம்பாட்டு ஆணைகளின் அட்டவணை 2ல் குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தியின் தன்மைக்கேற்ப கட்டணம்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களால் வழங்கப்படும் சான்றிதழ்கள்<br>➢ விண்ணப்பதாரர் நிலத்தின் உரிமையாளராக இல்லாதபோது நில உரிமையாளர் இணக்கம் தெரிவித்த கடிதம்<br>➢ நிலம் அமைந்துள்ள இடத்திற்கு இலகுவாக நுழைவதற்கு சுற்றியுள்ள அமைப்புகளும் காட்டப்பட்டுள்ளபடி சுருக்கமாக வரையப்பட்ட வரைபடம்<br>➢ நொத்தாரிசு ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட பத்திரத்தின்(Deed) பிரதியொன்று | | | | |
| 18 | அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியான காலத்தை நீடித்தல் | ➢ சரியாகப் பூர்த்தி செய்த விண்ணப்ப படிவம்<br>➢ அங்கீகரிக்கப்பட்ட அபிபிருத்தி திட்டத்தின் மூலப்பிரதி<br>➢ வழங்கப்பட்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதி<br>➢ விண்ணப்பதாரரின் தேசிய அடையாள அட்டையின், இரு பக்கங்களிலும் உருதிப்படுத்தப்பட்ட பிரதி<br>➢ விண்ணப்பதாரர் நிலத்தின் உரிமையாளராக இல்லாதபோது நில உரிமையாளர் இணக்கம் தெரிவித்த கடிதம் | 07 நாட்கள் | முன் பணிமனை அலுவலர்<br>081-2352275 | ➢ கௌரவ தலைவர்<br>➢ செயலாளர்<br>➢ பணி அதிகாரி (S.W) (திட்டமிடற் பிரிவு)<br>➢ தொழில்நுட்ப அதிகாரி<br>➢ விடய அலுவலர் | காலத்தை நீடித்தல், ஒரு வருடத்திற்கு ரூ .5000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 19 | நூலகத்தின் அங்கத்தவர் உரிமை பெற்றுக்கொள்ளல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் | 01 நாள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ செயலாளர்<br>➢ நூலக பொறுப்பு அதிகாரி<br>➢ நூலக உதவியாளர்கள் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ 20.00<br>➢ நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் வயது வந்தவர்களுக்கான அங்கத்தவர் கட்டணம் ரூ. 150.00 வைப்பு ரூ. 200.00 சேவை கட்டணம் ரூ. 200.00<br>➢ நகர சபை அதிகார பிரதேசத்திலிருந்து 10 மைல்களுக்குள் அங்கத்தவர் கட்டணம் ரூ. 200.00 வைப்பு ரூ. 300.00 சேவை கட்டணம் ரூ. 200.00<br>➢ நகர சபை அதிகார பிரதேசத்திற்குள் சிறுவர்களுக்கான அங்கத்தவர் கட்டணம் ரூ. 100.00 வைப்பு ரூ. 100.00 சேவைக் கட்டணம் ரூ. 100.00<br>➢ நகர சபை அதிகார பிரதேசத்திலிருந்து 10 மைல்களுக்குள் சிறுவர்களுக்கான அங்கத்தவர் கட்டணம் ரூ. 150.00 வைப்பு ரூ. 200.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | சேவை கட்டணம் ரூ. 150.00 |
| 20 | வீதி ரேகை மற்றும் சுவீகரிக்கப்படாமை சான்றிதழைவழுங்குதல். | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தை வேலைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ காணிக்குறிய காணி உறுதியின் பிரதி<br>➢ வரைதிட்டத்தின்(plan) பிரதி<br>➢ வருமானப் பிரிவிலிருந்து மதிப்பிட்டு வரி அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் (மதிப்பீட்டுவரி நிலுவைகள் இருப்பின் அவை அனைத்தும் செலுத்தப்படுதல் வேண்டும்)<br>➢ வேலைப் பிரிவிலிருந்து தொழில்நுட்ப அலுவலரது அறிக்கையைப் பெறுதல்<br>➢ வேலைப் பிரிவிலிருந்து பணி அதிகாரியின் (S.W) பரிந்துரையை பெறுதல் | அனைத்து ஆவணங்களும் பூரணமெனின் ஒரு மணி நேரத்துக்குள; . | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ செயலாளர்<br>➢ வருமானப் பிரிவின் பொறுப்பாளர்<br>➢ தொழில்நுட்ப அதிகாரி / பணி அதிகாரி (S.W)<br>➢ வேலைப் பிரிவின் விடயப் பொறுப்பு அலுவலர் | வீதி ரேகை மற்றும் சுவீகரிக்கப்படாமை சான்றிதழை பெறுவதற்கு ரூ. 1250.00 அறவிடப்படும் |
| 21 | நீர்க்குழாய் பதிப்பதற்காக பாதையைப் பழுதாக்குதல் | ➢ தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை வழங்கிய கடிதம்<br>➢ வருமானப் பிரிவிலிருந்து மதிப்பீட்டு வரி அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல் (மதிப்பீட்டுவரி நிலுவைகள் இருப்பின் அவை அனைத்தையும் செலுத்தப்பட வேண்டும்) | அனைத்து ஆவணங்களும் பூரணமெனின் ஒரு மணி நேரத்துக்குள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ செயலாளர்<br>➢ வருமானப் பிரிவின் பொறுப்பாளர்<br>➢ தொழில்நுட்ப அதிகாரி / பணி அதிகாரி (S.W)<br>➢ வேலைப் பிரிவின் விடயப் | பாதையைப் பழுது படுத்தும் அளவைப் பொறுத்து மாறுபடும் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | ➢ வேலைப் பிரிவிலிருந்து தொழில்நுட்ப அலுவலரது அறிக்கையைப் பெறுதல்<br>➢ வேலைப் பிரிவிலிருந்து பணி அதிகாரியின் (S.W) பரிந்துரையை பெறுதல் | | | பொறுப்பு அலுவலர் | |
| 22 | அபாயகரமான மரமொன்றை வெட்டி அகற்றுதல் | ➢ எழுத்துமூல வேண்டுகோள்<br>➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தைக் வேலைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ தொழில்நுட்ப அலுவலரின் அறிக்கையைப் பெற்றுக்கொள்ளல்<br>➢ பணி அதிகாரியினது பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளல்<br>➢ சட்டபூர்வ அனுமதி பெறப்படவேண்டிய மரம் எனின் பிரதேச செயலாளரது அனுமதி பெறப்பட்ட ஆவணம் | 14 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ வேலைப் பிரிவின் பணி அதிகாரி,<br>➢ தொழில்நுட்ப அலுவலர்<br>➢ விடய அலுவலர் | அபாயகரமான மரமொன்றை வெட்டி அகற்றுவதற்கு முறைப்பாடு செய்தல் ஒரு மரத்திற்கு ரூ. 150.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 23 | சுற்றாடல் பாதுகாப்புச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளல் | ➢ பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம் (விண்ணப்பப் படிவத்தைக் குறித்த கட்டணத்தைச் செலுத்திக் காசாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்)<br>➢ வேலைத் திட்ட அமைவிடத்தைக் காட்டும் வழித்தடக் குறிப்பு<br>➢ வணிக பெயர் பதிவுச் சான்றிதழ்<br>➢ உரிய உள்ளூராட்சி அமையத்தில் பெறப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரம் அல்லது பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு<br>➢ அங்கீகரிக்கப்பட்ட கட்டடித் திட்ட வரைவின் பிரதி<br>➢ காணியின் நில அளவையாளர் வரைதிட்டம்<br>➢ சிக்கலற்ற காணி உறுதியின் ஒரு பிரதி அல்லது வர்த்தகரின் உரித்துரிமை அல்லது உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்<br>➢ கழிவுகள் சுத்திகரிப்பு / காற்று மாசடைவு /ஒலி மாசடைவு ஆகியவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளின் திட்டம்<br>➢ புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தில் பெறப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் ஒரு பிரதி | 30 நாட்கள் | முன் பணிமனை அலுவலர் 081-2352275 | ➢ கௌரவ தலைவர்<br>➢ செயலாளர்<br>➢ சுற்றாடல் அலுவலர்<br>➢ சுகாதாரப் பிரிவுத் தலைவர்<br>➢ விடய அலுவலர்<br>➢ பொது சுகாதாரப்பரி சோதகர்<br>➢ பணி அதிகாரி (S.W)<br>➢ வருமானப் பரிசோதகர் | ➢ விண்ணப்ப படிவ கட்டணம் ரூ 1000.00<br>➢ சுற்றாடல் விதிகளில் குறிப்பிட்டுள்ள முன்கூட்டிய கட்டணம் ரூ. 3000.00<br>➢ அனுமதிப்பத்திர கட்டணம் ரூ 4500.00 |

**எங்கள் அர்ப்பணிப்பு**

- நேர்மையாக
- ஞானத்துடன்
- நற்பண்புடன்
- புரிந்துணர்வுடன்
- விடய அடிப்படையிலான மற்றும் பக்கச்சார்பற்ற
- வெளிப்படைத்தன்மையுடன்
- பொறுப்புணர்ச்சி டன்
- தாமதமின்றி
- செயல்திறனுடன் மற்றும் சாத்தியத்தன்மையுடனும்

வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

**எமது எதிர்பார்ப்பு**

எமது நிறுவனம் மீது நீங்கள் வைத்துள்ள நம்பிக்கை தொடர்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது சேவைக்கென நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை நேர்மையான, நியாயமான முறையில் உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதன் மூலமும், முழுமையான மற்றும் துல்லியமான தகவல்களை சமர்ப்பிப்பதன் மூலமும் எம்மிடமிருந்து நீங்கள் எதை எதிர்பார்க்கலாம், எதை எதிர்பார்ப்ப முடியாது என்பது குறித்து போதுமான அளவில் தெளிவு பெற்றிருப்பதன் மூலமும் உங்களுக்கு எமது ஒத்துழைப்பை வழங்க இயலும் என்பதனைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

**எமது தர நிருணயங்கள்**

உங்களிடமிருந்து பெறப்படும் எழுத்துமூல வேண்டுகோள் ஒவ்வொன்றுக்கும் உடனடியான பதில்களைப் பெறுவீர்கள். எமது பதில்கள் 07 நாட்களுக்குள் உங்களுக்குக் கிடைக்கும். கோரப்பட்ட தகவல் எழுத்துமூல ஆவணங்கள் மற்றும் கட்டணங்கள் உங்கள் கோரிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், நீங்கள் கோரிய சேவையை நாங்கள் தெரிவித்துள்ள கால எல்லைக்குள் உங்களுக்கு வழங்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வதில் தாமதமாகும் அல்லது கட்டாயம் தாமதமாகும் சந்தர்ப்பத்தில் அல்லது சிக்கல் சூழ்நிலை ஏற்படும் போது அதற்கான காரணத்தை நாம் உங்களுக்கு உடனடியாகத் தெரிவிப்போம்

**புகார்கள் மற்றும் நிவாரணங்கள் வழங்கப்படும் வழிமுறைகள்**

எமது நிறுவகத்தின் பணியாட் குழுவினர் பணிவாகவும் உதவும் பண்புடனும் சேவைகைளை வழங்குவர். மேற்குறித்த நிவாரணங்கள் மற்றும் தர நிருணயம் தொடர்பில் நீங்கள் உங்களது புகார்களை பின்வரும் அலுவலர்களுக்குத் தெரிவியுங்கள்.

**பெயர்:** பீ.எம். சமந்த அருண குமார
**பதவி:** கௌரவ தலைவர்
**அமைவிடம்**: கம்பளை நகர சபை
**தொலைபேசி /தொலைநகல் / மின்னஞ்சல்:** 081-2351373
**மின்னஞ்சல்:** 081-4951277
urbancouncilgampola@yahoo.com

**பெயர்:** யூ.ஜீ. ஜயரத்ன
**பதவி:** செயலாளர்
**அமைவிடம்:** கம்பளை நகர சபை
**தொலைபேசி /தொலைநகல் /**
urbancouncilgampola@yahoo.com

அனைத்து முறைப்பாடுகளும் பெறப்பட்டன என்பதை 03 நாட்களுக்குள் அறிவிக்கப்படும். இறுதியான பதில் 07 நாட்களுக்குள் அறிவிக்கப்படும்.

- சேவை பெறுநர் பொது மக்களான நீங்கள் முன்னவைக்கும் பிரேரணைகளை நங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம்

**அ**. உங்களுடன் அல்லது எங்கள் சேவைகளைப் பெறும் உங்கள் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான சந்திப்புகல் நடத்தப்படும். நீங்கள் எங்களுடன் தொடர்பு கொள்ள விரும்பினால் தயவுசெய்து தொலைபேசி எண் 081-2352275 ஐ தொடர்பு கொள்ளவும்.

**ஆ**. இந்த சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்த உங்கள் ஆலோசனையைப் பெறுவதற்கு அல்லது உங்கள் கருத்துக்களை பதிவு செய்வதற்க்கு, உங்கள் விருப்பத்தை தெரிவிக்க தகவல்களை எமது www ................... எனும் வலைத்தளத்திற்கு அனுப்புங்கள்

**சாசனத்தின் கீழ் வழங்கப்படும் சேவைகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்து மேம்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.!.!**